பக்கங்கள் 18

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மாசி 01 செவ்வாய்க்கிழமை 13.02.2024 அதிர்வு 197


## மின்சார வேலியில் சிக்கி மாமனாரும் மருமகனும் பலி

### வாழைச்சேனையில் சோகம்

மட்டக்களப்பு – வாழைச்சேனை, ஈச்சையடி பகுதியிலுள்ள பண்ணை ஒன்றில் சட்டவிரோத மின்சார வேலியில் சிக்கி உயிரிழந்தனர் எனக் கூறப்படும்

04 ▸







# 2024 இல் ஜனாதிபதித் தேர்தல் 2025 இல் நாடாளுமன்றத் தேர்தல்

## ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு



ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடம் உரிய காலத்துக்குள் நடத்தப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு இன்று அறிவித்துள்ளது.

அத்துடன், அடுத்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படும் என்றும், இதற்கான நிதி 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

தேர்தல்களை நடத்தும் பொறுப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவைச் சார்ந்துள்ளது என்றும், தேவையான சந்தர்ப்பங்களில் தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் அரசு இணைந்து செயற்படும் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

04 ▸

# சஜித்தின் தொகுதி அமைப்பாளர் ரணிலுடன் சங்கமம்

ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல், கட்டுகம்பொல தொகுதி அமைப்பாளரான அசங்க பெரேரா, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இன்று இணைந்துள்ளார்.

வடமேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரான அசங்க பெரேரா, முன்னாள் அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேராவின் மகனாவார்.

காமினி ஜயவிக்கிரம பெரேரா, ஐக்கிய தேசியக் கட்சியில் தவிசாளர் பதவியை வகித்தவர். நல்லாட்சியின் போது அமைச்சுப் பதவியையும் வகித்தார். கடந்த பொதுத்தேர்தலில் போட்டியிடவில்லை. தற்போது நோய்வாய்ப்பட்டுள்ளார்.




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குருநாகல் சென்றிருந்தபோது, காமினி ஜயவிக்கிரம பெரேராவைச் சந்திக்க அவரின் வீட்டுக்குச் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே காமினி ஜயவிக்கிரம பெரேராவின் மகன், அசங்க பெரேரா ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து விலகி, மீண்டும் ஐ.தே.கவுக்குள் சென்றுள்ளார்.

# உயர்நீதிமன்றத்தின் பரிந்துரைகளையும் மீறி நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலைக் காப்புச் சட்டம்!

## சட்டத்துறைத் தலைவர் கோசலை மதன் சுட்டிக்காட்டு

(த.சுபேசன்)

நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் 56 சட்ட ஏற்பாடுகளில் 31 ஏற்பாடுகள் - உறுப்புரைகளை திருத்தி அமைக்கப்பட்ட பின்னரே சட்டமாக்க வேண்டும் என்ற உயர்நீதிமன்ற பரிந்துரையை மீறி நிகழ்நிலைக் காப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ்ப்பாண பல்கலைக் கழக சட்டத்துறைத் தலைவர் திருமதி கோசலை மதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த செயலமர்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,



அரசமைப்புக்கு முரணான சட்டங்களை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும்.ஆனால், நிகழ்நிலைக் காப்புச் சட்டம் உயர் நீதிமன்றம் பரிந்துரைத்த திருத்தங்களை மேற்கொள்ளாது சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றம் பரிந்துரைத்தபடி சட்டம் நிறைவேற்றப்படாமையால் வலிதான சட்டமாக இதனைக் கருத முடியாது.

நிகழ்நிலை காப்புச் சட்டம் உருவாக்கப்பட வேண்டியது அவசியமா?, அவ்வாறு உருவாக்கப்பட வேண்டிய தேவை இருந்தால் எவ்வாறான உள்ளடக்கங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்?, அரசமைப்பில் கூறப்பட்டுள்ளவாறு இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளதா?, சட்டத்தால் சமூகத்தில் ஏற்படக்கூடிய விளைவுகள் என்ன? எனப் பல தன்மையில் நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை தெளிவாக ஆராய வேண்டிய தேவை உள்ளது.

இலங்கையின் அரசமைப்பைப் பொறுத்தவரை ஒரு சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு சபாநாயகரால் சட்டமாக்கப்பட்டுவிட்டதாக சான்றிதழ்படுத்திய பின் அந்தச் சட்டத்தை எந்த நீதிமன்றத்தாலும் கேள்விக்கு உட்படுத்த முடியாது என்ற விதி உள்ளது.

அவ்வாறான விதி ஒன்று உள்ள போதிலும் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலைச் சட்டம் தொடர்பாக ஆராய்கிறோம்.

அரசமைப்பு இத்தகைய சட்டங்களை கேள்விக்குட்படுத்துவதைத் தடை செய்திருக்கக் கூடிய நிலையில் சட்டம் உருவாக்கப்பட விதம் சரியானதா?, உள்ளடக்கம் சரியானதா?, சட்டத்தால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் எவை?, பாதிப்புக்களை எப்படிக் கட்டுப்படுத்துவது? என்பது தொடர்பில் நாம் இப்போது பேசுவது சர்ச்சைக்குரிய விடயம்.மேலோட்டமாக அரசமைப்பை விளங்கிக் கொண்டால் இந்த ஆராய்வு சர்ச்சைக்குரிய விடயமாகவே தோன்றும்.

நிகழ்நிலை காப்புச் சட்டம், சட்ட மூலமாக இருந்த போதே இது தொடர்பில் உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் பல கேள்விகள் எழுப்பப்பட்டன. நீதிமன்ற மீளாய்வுக்கான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

உயர்நீதிமன்றம் இந்தச் சட்ட மூலத்தில் சில திருத்தங்களை மேற்கொள்ளுமாறு சபாநாயகருக்கு அறிவித்த நிலையிலும் அந்தத் திருத்தங்களை செயற்படுத்தாமல் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ள பின்னணியில் தான் நாம் இந்தச் சட்டம் தொடர்பாக ஆராய்ந்து வருகிறோம்.

உயர்நீதிமன்றம் பரிந்துரைத்தபடி சட்டம் நிறைவேற்றப்படாத போது இதனை வலிதான சட்டமாகக் கருத முடியாது.

உயர்நீதிமன்றம் பரிந்துரைத்தபடி சட்ட மூலத்தின் 31 ஏற்பாடுகளிலும் திருத்தம் மேற்கொண்ட பின் சட்டமாக்கியிருந்தால் கேள்வி எழுப்ப முடியாது.

உயர்நீதிமன்ற பரிந்துரைகளைச் செவிமடுக்காமல் சட்டம் நிறைவேற்றப்பட்டிருப்பதால் இதனைக் கேள்விக்கு உட்படுத்த முடியும் என சட்ட அறிஞர்கள் தெரிவிக்கின்றனர்.- என்றார்.

# பாண்டிருப்பில் ஒதுங்கிய சடலம் இனங்காணப்பட்டது

(பாறுக் ஷிஹான்)

கல்முனை பாண்டிருப்பு கடற்கரை பகுதியில் கரையொதுங்கிய ஆணின் சடலம் இனங்காணப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பில் விஷ்ணு கோயிலை அண்டிய கடற்கரை பகுதியில் ஒருவரது சடலம் மீட்கப்பட்டது. சடலம் அடையாளம் காண்பதற்காகக் கல்முனை ஆதார வைத்திய சாலைக்கு எடுத்து செல்லப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை (12) மீட்கப்பட்ட இச்சடலம் மட்டக்களப்பு மாவட்டம் செட்டிபாளையம் பகுதியை சேர்ந்த கதிரவேல் பத்மராஜ் (வயது 59) எனும் மூன்று பிள்ளைகளின் தந்தை என்று அவரது மனைவி வசந்தி அடையாளம் காட்டியுள்ளார்.

மரணமடைந்தவர் தனது வீட்டில் இருந்து கடைக்கு சென்று வருவதாக தெரிவித்து வெளியே சென்ற நிலையில் காணாமல் போயிருந்தார் என்றும் இது தொடர்பில் களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.




# 'வங்கூழ்' கவிதை நூல் வெளியீடு!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஆசிரியர், கலைஞானச்சுடர் ஸ்ரீமதி சுபாஷினியின் 'வங்கூழ்' கவிதை நூல் வெளியீட்டு விழா வெள்ளவத்தை ருத்திரா மாவத்த, தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்றது.

பிரித்தானிய சைவ முன்னேற்ற சங்க முன்னாள் தலைவர் ரபீந்திர மோகன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தக் குமார் பிரதம அதிதியாகவும் வீரகேசரி பத்திரிகையின் பிரதம நிறைவேற்று அதிகாரி செந்தில் நாதன், தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் செந்தில்வேலவர் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

# அலி சப்ரி எம்.பி. பயணித்த கார் விபத்தில் ஒருவர் காயம்!

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ் )

நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் பயணித்த கார் விபத்தில் சிக்கியதில் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று சாலியவெவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து இன்று (13) அதிகாலை ஒரு மணியளவில் புத்தளம் – அநுராதபுரம் வீதியின் 15 ஆம் தூண் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

அளுத்கம மேல் புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த எச்.எம். ஹர்ஷன பிரதீப் என்பவரே விபத்தில் காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் சிகிச்சைக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் புத்தளத்தில் இருந்து அநுராதபுரம் நோக்கி பயணித்த போது, நாடாளுமன்ற உறுப்பினரின் கார் அதே திசையில் பயணித்த உழவு இயந்திரத்தின் பின்புறம் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

உழவு இயந்திரத்தை ஓட்டிச் சென்றவரே காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பயணித்த காரின் சாரதி சாலியவெவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சாலியவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முசலி பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மன்னார் மாவட்டத்தின் முசலிப் பிரதேச செயலாளர் ரஜீவ் நெறிப்படுத்துதலில் இந்த ஆண்டுக்கான முதலாவது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் முசலிப் பிரதேசச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று (12) இடம்பெற்றது.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கல்வி, சுகாதாரம் , விவசாயம், மீன்பிடி,வனவளம், வாழ்வாதார உதவித் திட்டம் மற்றும் உட்கட்டமைப்பு உள்ளிட்ட விடயங்கள் பற்றிக் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ குலசிங்கம் திலீபன், திணைக்கள தலைவர்கள், அரச பதவி நிலை உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்,பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.








# பணிப் பகிஷ்கரிப்பால் நோயாளிகள் நெருக்கடி

(பிரபாகரன் டிலக்சன்)

நாடளாவிய ரீதியில் 72 சுகாதார தொழிற்சங்கங்களைச் சேர்ந்த ஊழியர்களால் மேற்கொள்ளப்படும் பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலும் இடம்பெற்று வருகின்றது. இதனால் நோயாளர்கள் கடும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

35 ஆயிரம் ரூபா கொடுப்பனவைத் தமக்கும் வழங்குமாறு கோரி இன்று காலை 6.30 மணி முதல் நாடளாவிய ரீதியில் தொடர் பணிப் பகிஷ்கரிப்பில் சுகாதார தொழிற்சங்கங்களைச் சேர்ந்த ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பெரும்பாலான கிளினிக்குகள் நடைபெறாமல் ஸ்தம்பித்துள்ளன. வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

வைத்தியர்களுக்கு 35 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்குவதற்கு அண்மையில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் 35 ஆயிரம் ரூபா கொடுப்பனவு தமக்கும் வழங்கப்பட வேண்டும் எனக் கோரி 72 தொழிற் சங்கங்கள் இதற்கு முன்னரும் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் அநுரகுமாரவுடன் இன்று பேச்சு



ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் திருமதி காமென் மொரெனோவுக்கும், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையிலான சந்திப்பு இன்று பிற்பகல் ஜே.வி.பியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி மற்றும் நடப்பு அரசியல் நிலைமை பற்றி இங்கு கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாத்தல், ஜனநாயகத்தை பாதுகாத்தல் என்பன பற்றியும் ஆராயப்பட்டன.

அத்துடன் நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் பற்றியும் இந்த உரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது. இரு தரப்பினருக்கும் இடையில் உறவுகளைப் பலப்படுத்திக்கொள்ளல் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை பிரதிநிதிகள் குழுமத்தின் பிரதிப் பிரதானி லார்ஸ் பிறெடால், தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர விஜித ஹேரத் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மின்சார வேலியில்...**

இருவரின் சடலங்கள் இன்று மீட்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குடும்பிமலை பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய நபரும், அவரது மருமகனான புலிபாய்ந்த கல்லைச் சேர்ந்த 21 வயதுடைய நபரும் இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் பிரதி அமைச்சர் ஒருவருக்குச் சொந்தமான குறித்த பண்ணையை வாழைச்சேனையைச் சேர்ந்த நபர் ஒருவர் குத்தகை அடிப்படையில் நிர்வகித்து வருகின்றார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

**2024இல்...**

இதேவேளை, இவ்வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் (தற்போதைய ஜனாதிபதி) ரணில் விக்கிரமசிங்கவும், ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் அதன் தலைவர் சஜித் பிரேமதாஸவும், தேசிய மக்கள் சக்தியின் சார்பில் அதன் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவும் போட்டியிடவுள்ளனர் என்று அக்கட்சிகள் அறிவித்துள்ளன. ஆனால், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் இன்னமும் தீர்மானம் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# அமெ. உலகத் தமிழ் பல்கலையால் ஜெயசிறிலுக்கு கலாநிதி பட்டம்!

(வி.ரி.சகாதேவராஜா)

அமெரிக்க உலகத் தமிழ் பல்கலைக் கழகமானது, காரைதீவு முன்னாள் தவிசாளரும் சமூக செயற்பாட்டாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலுக்கு சமூக சேவைக்கான மதிப்புறு முனைவர் ( uhonorary Doctorate) கலாநிதி பட்டத்தை வழங்கி கௌரவித்தது.

சர்வதேச பட்டமளிப்பு விழா சனிக்கிழமை இரவு கொழும்பு தாஜ்சமுத்ரா ஹோட்டலில் நடைபெற்றபோது விருது வழங்கப்பட்டது.

உலகத் தமிழ் பல்கலைக்கழகம் உள்ளிட்ட 11 அமைப்புக்கள் இணைந்து வருடாந்தம் சமுதாயத்தில் அரசியல், கல்வி, கலை, வாழ்வியல், வியாபாரம் மற்றும் சமூக சேவைகள் செய்த பிரமுகர்களுக்கு இவ்வாறான மதிப்புறு முனைவர் கலாநிதி பட்டத்தை வழங்கி வருகிறது.

அந்த வகையில் இந்த ஆண்டுகான சர்வதேச பட்டமளிப்பு விழா சனிக்கிழமை இரவு நடைபெற்ற போது 25 பிரமுகர்களுக்கு இந்தப் பட்டம் வழங்கப்பட்டது. பல்கலைக்கழக வேந்தர் மற்றும் உபவேந்தர் ஒப்பமிட்ட சான்றிதழ் மற்றும் பதக்கங்களை வழங்கப்பட்டன.

காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரான கலாநிதி கி.ஜெயசிறில் கிழக்கில் மிகவும் நன்கு அறியப்பட்ட சமூக சேவையாளராவார். இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவராவார். அனர்த்த காலங்களில் கிழக்கு மலையகம் என நேரடியாக சென்று மக்களுக்கு உதவி வருபவர்.

இவரக்குக் கலாநிதி பட்டம் கிடைக்கப் பெற்றதை அடுத்து கட்சியின் மாவட்ட உறுப்பினர்களால் அவர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

இலங்கை தமிழரசு கட்சியின் அம்பாறை மாவட்டத் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கவிந்திரன் கோடீஸ்வரன் தலைமையிலான குழுவினர் நேற்று (12) திங்கட்கிழமை மாலை அவரது இல்லத்துக்குச் சென்று பாராட்டினர்.

இதேவேளை, கலாநிதி பட்டம் பெற்ற ஜெயசிறிலுக்கு காரைதீவில் வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.

காரைதீவு விக்னேஷ்வரா வித்தியாலய ஆசிரியர், மாணவர்களால் வரவேற்பு விழா நடத்தப்பட்டுள்ளது.

இந்த விழா பாடசாலையின் அதிபர் பொன்.பாலேந்திரா தலைமையில் இடம்பெற்றது.










# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணிலை நம்பார் தமிழர்கள்

ஒவ்வொருவரின் நடத்தையையும் நம்பகத் தன்மையையும், கடந்த காலத்தில் அவரவர்களின் செயற்பாடுகளை வைத்துத்தான் எடைபோடவேண்டும். அது தவிர்க்க முடியாத நியதி. இந்தஅளவீட்டுக்குஅரசியல்வாதிகளும் விதிவிலக்கல்லர்.

அரசியல்வாதிகள் அவ்வப்போது அளிக்கின்ற உறுதிமொழிகள் கூட அவை தொடர்பில் கடந்த காலத்தில் அவர்களின் செயற்பாடுகள், நடத்தைகள் போன்றவற்றின் அடிப்படையில்தான் மதிப்பிடப்பட வேண்டும். இந்த அளவீடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விடயத்திலும் பொருந்தும்.

இனி வரப் போகின்ற ஜனாதிபதித் தேர்தலை ஒட்டியும், ஏனைய விவகாரங்கள் சம்பந்தமாகவும் அவர் தரப்போகின்ற உறுதிமொழிகளை இந்த வகையில் மதிப்பிட்டுத் தீர்மானிப்பதுதான் தமிழர்களாகிய நமக்குச் சரியானதாக இருக்கும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் ஏழெட்டு மாதங்கள் இருக்கையில், கடைசி நேரத்தில் புது கதை ஒன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பக்கத்திலிருந்து இப்போது கசிய விடப்பட்டுள்ளது. அது ரணில் விக்கிரமசிங்கவின் உத்தேசத் திட்டமா அல்லது பதவியேற்ற நாளிலிருந்து இப்போது வரை அவர் அடிக்கடி வெளியிடும் - பறக்கவிடும் - பலூன் போன்ற அறிவிப்பு வகையறாக்களில் இதுவும் அடங்குமா என்பது தெரியவில்லை.

நாட்டைச் சீரழித்து வரும் தனிநபர் அதிகாரமான நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை ஒழித்து, சுமார் 45 ஆண்டுகள் கழித்து மீண்டும் நாடாளுமன்றத்துக்குப் பதில்கூற வேண்டிய பிரதமர்தலைமையிலான ஆட்சி முறையை ஏற்படுத்தப் போகின்றார் என்றும், அதற்காக தற்போதைய ஜனாதிபதி பதவியை ஒரு வருடம் நீடித்து அதில் அவர் தொடரப் போகின்றார் என்றும் யோசனைத் திட்டம் ஒன்று அவர் பக்கத்தில் இருந்து கசிந்து இருக்கின்றது.

முதலில் ஜனாதிபதித் தேர்தல், பின்னரே நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பு என்று இவ்விடயத்தில் தன் முடிவை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நேரத்துடனேயே ரணில் தரப்பின் உத்தேச திட்டத்திற்குப் பதிலடி தந்து விட்டது.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவிக்கு தெரிவான ஒருவர் அந்த ஐந்து ஆண்டுகள் பதவிக்காலத்தை ஆண்டனுபவிக்காமல் ஒரு வருடத்தில் அதனைச் சுருக்குவதற்கு எச்சமயத்திலும் இணங்கார் என்பது திண்ணம்.

தமது ஆறு ஆண்டுகள் பதவிக்காலத்தை ஐந்து ஆண்டுகளாகச் சுருக்க இணங்கிய ஒரே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனதான். அதுவும் நல்லாட்சி அரசின் ஆரம்ப காலத்தில் தமக்கு நம்பிக்கைக்குரிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவை வைத்து, அப்படி ஓர் ஏற்பாட்டுக்கு இணங்கி மோசம் போனோம் என்பதை அவரே பின்னாளில் பதவியில் இருக்கும் போதே ஒப்புக் கொண்டு மனவேதனைப்பட்டார் என்பதை மறந்து விட முடியாது.

பொதுவாக ஒரு வருட காலக்கெடு விதித்து, அதன் அடிப்படையில் தரப்புகளை ஏமாற்றுவதில் அசகாய சூரர் ரணில் விக்கிரமசிங்க. இது விடயத்தில் தமிழர் தரப்புக்கு நல்ல - தெளிவான - பட்டறிவு உண்டு.

தெற்கில் நடைபெறவிருந்த இரு மாகாண சபை தேர்தல்களுக்கு முகம் கொடுக்க அஞ்சி அதனை தள்ளிப்போட நல்லாட்சி அரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முயன்ற போது, அச்சமயத்தில் அவரது அரசுக்கு முண்டு கொடுத்துத் தாங்கிக் கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதற்கு ஒத்துழைத்தது. அந்த முயற்சிக்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவை தமிழர் தரப்புத்தான் முன்நின்று பிற தரப்புகள், கட்சிகளை ஒழுங்குப்படுத்திப் பெற்று கொடுத்தது.

மாகாண சபைத் தேர்தல் சட்டங்களை ஒரு வருடத்திற்குள் சீர்செய்து ஒழுங்குபடுத்துவோம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக வழங்கிய உறுதி மொழியின் பெயரில்தான் இருக்கும் மாகாண சபை தேர்தல் சட்டத்தை ஒழிக்கும் அந்த திருத்தத்திற்கு இணங்கி தமிழர் தரப்பு ஒத்துழைத்தது. அந்த தேர்தல் சட்டத்தையே இல்லாதொழிக்கும் நாடாளுமன்ற நடவடிக்கைக்கு முழு ஒத்துழைப்பு வழங்கியது.

ஆனால் இப்போது நிலைமை என்ன? ஏழு ஆண்டுகளாகியும் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாத நிலைமைதான் நீடிக்கின்றது. ஓராண்டு என்று தாம் அளித்த வாக்குறுதிப்படி புதிய மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை பிரதமர் ரணில் கொண்டு வரவும் இல்லை. அது முடியாது என்ற காரணத்தினால், பழைய சாதாரண சட்டத்தை மீள நிறைவேற்றி மாகாண சபைகளைத் திரும்ப இயங்கவிடும் ஏற்பாட்டையும் அவர் செய்யவில்லை.

மாறாக, தமிழர்களின் போராட்டங்களின் விளைவாக தமிழர்களுக்கு அரைகுறைத் தீர்வாகக் கிடைத்த அதிகாரப் பரவலாக்கல் முறைமையான மாகாண சபைத் திட்டத்தை வருடக்கணக்கான காலம் அவர்கள் இழந்து போவதற்கான சட்ட ஏற்பாட்டை தனது ஒரு வருட வாக்குறுதி மூலம் அதே தமிழர்களைக் கொண்டே நிறைவேற்ற வைத்த ஏமாற்றுப் பேர்வழியானார் ரணில் விக்கிரமசிங்க.

தமிழர்களின் கைகளைக் கொண்டு அவர்களின் கண்களைக் குத்த வைத்த இந்த நம்பிக்கை மோசடிக்காரரின் ஒரு வருட வாக்குறுதியை இனியும் தமிழர் நம்பார்...!



# புலமைப் பரிசில் சாதனையாளர் பாராட்டு!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் “எமேஜிங் ட்லெண்ட் - 2024” எனும் தொனிப் பொருளில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் பெற்றோர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.



பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம். இல்லியாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவுக்கு கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திர குமார் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சஹ்துல் நஜீம் நிகழ்வில் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டார்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம்.எச்.எம். ஜாபிர் (நிர்வாகம்) , திருமதி எம்.எச். றியாஸா (முகாமைத்துவம்) மற்றும் நிந்தவூர் கோட்டக் கல்விப் பணிப்பாளரும் உடற்கல்விக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளருமான யூ.எல்.எம். சாஜித் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் ஆரம்ப கல்விக்கான வளவாளர் எஸ்.எம்.எம். அன்சார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.












# 120 பயனாளிகளுக்கு மன்னாரில் ஆடுகள்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பின்தங்கிய கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு விவசாய அமைச்சால் முன்னெடுக்கப்படும் ஆடு வளர்ப்பு திட்டத்தின் மூலம் மன்னார் மாவட்டத்தில் 120 பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.

ஐந்து பிரதேச செயலகங்களை உள்ளடக்கியவாறு சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியில் ஒரு பயனாளிக்கு மூன்று ஆடுகள் வீதம் மொத்தமாக மன்னார் மாவட்டத்தில் 120 பயனாளிகளுக்கான ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.

மன்னார் நகர பிரதேச பிரிவுக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 32 பயனாளிகளில் முதற்கட்டமாக 7 பயனாளிகளுக்கான வளர்ப்புக்கான ஆடுகள் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தானால் வழங்கப்பட்டன.

மேலும் ஒரு தொகுதியாக 10 பயனாளிகளுக்கான 30 ஆடுகள் மன்னார் மாவட்ட அரச அதிபர் க. கனகேஸ்வரனால் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மாவட்ட விவசாய பணிப்பாளர் , கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வேலணை பாபா சன்னதியில் மாணவர்களிடையே போட்டிகள்



வேலணை வடக்கு சோழவத்தை கிராமத்தில் சாய் பாபாவின் சன்னதியில் கல்வி முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் முகமாக மாணவர்களிடையே மாலை கட்டுதல், கோலம் போடுதல், தோரணம் கட்டுதல் போட்டிகளில் சிறுவர்களின் பங்கு பெற்றலுடன் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் சிறந்த கோலம், தோரணம், மாலை கட்டும் போட்டியில் சிறப்பாகத் தனது திறமைகளை வெளிக்காட்டிய சிறுவர்களுக்கு முதல் பரிசு 5 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் பரிசு 3 ஆயிரம் ரூபாவும் மூன்றாம் பரிசு 2 ஆயிரம் ரூபாவும் பங்குபற்றிய அனைவருக்கும் தலா ஆயிரம் ரூபா வீதமும் வழங்கப்பட்டது.

புலமை பரீட்சையில் சித்தி அடைந்த பெண் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு சிறு தொகை ஊக்குவிப்பு நிதியும் வழங்கப்பட்டது.

ஆசிரியர் ஜெகதீஷ் மற்றும் சோழவத்தை கிராமத்தைச் சேர்ந்த குமாரசிங்கம் கல்யாணசுந்தரன் மற்றும் கரம்பொன்னை பிறப்பிடமாகவும் கனடாவில் இருந்து வருகை தந்த செல்லத்துரை கிருஷ்ண கோபால் ஆகியோர் இதற்கான நிதிப் பங்களிப்பைச் செய்திருந்தனர்.




# பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கிவைப்பு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு நகர் ரோட்டரி கழகத்தின் ஏற்பாட்டில் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை (10) மட்டக்களப்பில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு நகர் ரோட்டரி கழகத்தின் தலைவர் தொழிலதிபர் தேசபந்து எம்.செல்வராசா தலைமையில் மட்டக்களப்பு ஈஸ்ட் லகூண் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் 13 மாணவர்களுக்குப் புலமைப் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன. ஒரு மாணவருக்கு மாதாந்தம் 6 ஆயிரம் ரூபா வீதம் 12 மாதங்களுக்கான புலமைப்பரிசில் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கழகத்தின் செயலாளரும் கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் பிரதி உப வேந்தருமான கே.கருணாகரன், கழகத்தின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டனர்.



# ஜீவ ஊற்று அன்பின் கரம் அமைப்பின் 133ஆவது வீட்டுக்கு அடிக்கல் நடல்!

(அஸ்ஹர் இப்ராஹிம்)

நாட்டில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ள நிலையில், நிரந்தர வீடு இன்றி உள்ளவர்களுக்கு ஜீவ ஊற்று அன்பின் கரம் அமைப்பு வீடுகளை அமைத்து வழங்கி வருகிறது.

இந்த ஆண்டிலும் தன்னுடைய உன்னதமான பணிகளை சிறப்பாக செய்து வருகின்றது. நிரந்தர வீடின்றி அல்லலுறும் மக்களுக்கு நிரந்தர வீடுகளை நிர்மாணித்துக் கொடுத்து வருகின்றது. அந்த வகையில் ஜீவ ஊற்று அன்பின் கரத்தின் 133 ஆவது வீட்டுக்கு அடிக்கல்நட்டு வைக்கப்பட்டுள்ளது.

இந்த வீடு திருகோணமலை மாவட்டத்திலுள்ள குச்சவெளி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட தென்னைமரவாடி பகுதியில் அமையவுள்ளது.

இந்த வீடமைப்புக்கான நிதி உதவியை ஆஸ்திரேலிய மற்றும் இலங்கையில் செயற்படும் இழப்பை மீட்டெடுக்கும் அமைப்பு (PLEDGE TO RESTORE FOUNDATION ) ஒன்று வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# யானை வேலிகளை அமைத்து மனிதர்களைக் காப்பாற்றுங்கள்!

■ ஹஸ்பர் ஏ ஹலீம்

காட்டு யானைகளின் அச்சுறுத்தல் காரணமாக பல இன்னல்களை மக்கள் எதிர் நோக்கி வருகின்றனர். இது தொடர்ந்தும் இருந்தே வருகிறது. யானை மனிதன் முரண்பாடு என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக காணப்பட்டாலும் யானை தாக்குதலால் பல மனித உயிர்கள் பலியாகின்றன.

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச செயலர் பகுதியில் உள்ள ஆயிலியடி, வட்டமடு, செம்பிமோட்டை பகுதியானது விவசாயப் பூமியாகும். இந்தப் பகுதியில் 67 வயதான விவசாயி ஒருவர் 2024.01.21 அன்று மாலை காட்டு யானையின் தாக்குதலால் உயிர் இழந்தார்.

இந்தப் பகுதியில் முறையான யானை வேலி அமைக்கப்படாமையும் விவசாயிகள் பல துன்பங்களை அனுபவித்து வருவதாக கூறுகின்றனர்.

வன ஜீவராசிகள் திணைக்களம் ஊடான கண்காணிப்பில் உள்ள யானை வேலிகள் முறையானதாக அமைக்கப்படுவதில்லை என்று மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். தங்களது வயல் நிலங்கள், பயிரினங்களை பாதுகாப்பதற்காக விவசாயிகள் இரவு நேரங்களில் பாதுகாப்புக்காக பல அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றார்கள்.

சில வேலைகளில் யானையின் அட்டகாசத்தால் பல பயன் தரும் மரங்கள் , நெற் செய்கை போன்றனவும் அழிக்கப்படுகின்றன.

ஆயிலியடி பகுயியில் மாத்திரம் 2015 தொடக்கம் 2024 தற்போது வரை 03 உயிர்கள் யானையின் தாக்குதலால் காவு கொள்ளப்பட்டுள்ளன. இந்தப் பகுதி மக்கள் விவசாயத்தை நம்பியே வாழ்கிறார்கள். நெற் செய்கை பண்ணப்படும் போதும் அதனைப் பராமரித்து அறுவடை செய்யும்வரை அச்ச சூழ் நிலையில் யானைகளுக்குப் பயந்து காலத்தை வயல் நிலங்களில் இரவு வேலைகளில் கழித்து வருகின்றனர்.

உரிய அரச திணைக்களங்கள் யானை வேலிகளைப் பராமரிக்கவும் பாதுகாப்பற்ற பகுதிகளுக்கு சீரான தரமான யானை வேலிகளை அமைக்கவும் முன்வர வேண்டும். இதற்காக பொறுப்புடன் அவர்கள் செயற்பட வேண்டும். மக்கள் நலனில் அக்கறை உள்ளவர்களாக காட்டு யானைகளின் தொல்லைகளில் இருந்து பாதுகாக்க சிறப்பு பயிற்சி திட்டங்களையும் முறையான வேலைத் திட்டங்களையும் ஆரம்பிக்க வேண்டும்.

காட்டு யானைகள் குப்பை மேடுகளைத் தேடி வருவதால்தான் மக்கள் குடியிருப்புகளுக்குள் அவை வர வேண்டி ஏற்படுகிறது.

யானை மனிதன் மோதல் என்ற நிலை காணப் பட்டாலும் பல யானைகள் பல்வேறு காரணங்களால் உயிரிழக்கின்றன. மின்சான வேலியில் சிக்குதல், பட்டாசு வெடித்து உயிரிழத்தல் போன்ற காரணங்கள் உட்பட இயற்கை மூலமான உயிரிழப்புக்களும் இடம் பெறுகின்றன.

வனஜீவராசிகள் திணைக்களத்தின் அறிக்கையின் படி 2022 ஆம் ஆண்டில் 439 யானைகள் உயிரிழந்துள்ளன என்றும் 2023 ஜனவரி தொடக்கம் டிசெம்பர் 01வரை 449 யானைகள் உயிரிழந்துள்ளன என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான நிலையில் யானைத் தாக்குதல் தொடர்பாக ஆயிலியடி பகுதியின் இளைஞன் ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

“யானை தாக்கம் இங்கு அதிகரித்து உயிர் சேதங்களும் நிலவி வருகின்றன. பரம்பரை பரம்பரையாக நாங்கள் விவசாயமே செய்து வருகின்றோம். யானை வேலி இருக்கின்ற போதும், அவை சீராக இல்லை. வருடா வருடா யானைகளது தாக்குதல் காரணமாக பல உயிர் சேதங்கள் ஏற்படுகின்றன. விவசாயத்தைத் தவிர எங்களுக்கு வேறு தொழில் தெரியாது. அரசு மூலமான தீர்வு இல்லை. உயிர் சேதம் இடம் பெற்றே வருகிறது. யானை வேலிகளை பராமரித்து தருமாறு உரிய அதிகாரிகளிடம் கேட்டுக் கொள்கின்றோம்” என்றார்.

இப்படியாக யானை தாக்குதல் காரணமாக உயிரை பணயம் வைத்து விவசாய நிலத்தை பாதுகாக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு அப்பாவி விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆயிலியடி கிராம மக்கள் அன்றாட ஜீவனோபாயமாக விவசாயம், கூலித் தொழில் மூலமாக வாழ்வாதாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

“விவசாயம் செய்து வருகிறோம். யானை வேலி சீரில்லை. இதனைச் சீராக்கித் தாருங்கள். இது யாரும்

தொடர்ச்சி ▼

# யானை வேலிகளை அமைத்து மனிதர்களைக் காப்பாற்றுங்கள்!

தொடர்ச்சி ▲

தேடுவாரற்ற நிலையில் உள்ளது. இதனை முறையாகச் சீராகப் பாதுகாத்து யானை தாக்குதலில் இருந்து பாதுகாத்து தாருங்கள்" என இப் பகுதியின் விவசாயி ஒருவர் தனது ஆதங்கத்தை, யானை தாக்குதலால் உயிரிழந்தவரின் சம்பவ இடத்தில் வைத்துத் தெரி வித்தார்.

மனித யானை மோதல் என்பது பல காலமாக இடம் பெற்று வருகின்றது. திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் பல இடங்கள் விவசாயச் செய்கை கொண்ட இயற்கை எழில் கொண்ட இடமாகவும் பல இயற்கை வளங்களை கொண்ட பூமியாக காணப்படுகிறது. திருகோணமலையின் கன்னியா குப்பை மேட்டுப் பகுதி, தம்பலகாமம் ஜெயபுர குப்பை மேட்டுப் பகுதி, கிண்ணியா சின்னத்தோட்டம் குப்பை மேட்டுப் பகுதிகளை உள்ளடக்கிய பகுதிகளில் யானைகள் அதிகமாக நடமாடுகின்றன.

உள்ளூராட்சி மன்றங்கள் மூலமாகக் கொட்டப்படும் கழிவுகளைத் தேடி யானைகள் படை எடுக்கின்றன. அருகாமையில் உள்ள மக்கள் இந்தக் காட்டு யானை களால் அச்சச் சூழ் நிலையில்தான் வாழ்ந்து வரு கின்றனர்.

மக்களைப் பாதுகாக்கக் குப்பை மேட்டுக் கழிவுகளை முறையாக முகாமைத்துவம் செய்யக் கூடிய மீள் சுழற்சி மூலமாக உற்பத்திகளை அதிகரிக்க பல



திட்டங்கள் உள்ள போதிலும் முறையான திட்டம் ஊடாக நடைமுறைப்படுத்துவதாகத் தெரிய வில்லை.

சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும் சூழல் மாசடையாத வண்ணம் கழிவுகளை முகாமை செய்ய வேண்டும். சில வேளைகளில் கழிவுகள் மூலமாகச் சூழல் மாசடைவு ஏற்பட்டு மக்களை பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது.

எனவேதான் யானை தாக்குதலை குறைக்கவும் முறையான யானை வேலிகளை அமைக்கவும் உரியவர்கள் முன்வர வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்பாகும்.

# பணிப்பாளராக நியமனம்

(தலவாக்கலை நிருபர்)

தேசிய கல்வி நிறுவனத்தின் மீப்பே வளாகத்தில் அமைந்துள்ள கல்வி நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி துறையின் பணிப்பாளராக கலாநிதி எஸ்.கருணாகரன் உத்தியோக பூர்வமாக பதவியேற்றுக் கொண்டார்.

இவர் மஹரகம தேசிய கல்வி நிறுவனத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.





# பெண்களுக்கு ஏற்படும் தொடைப்பகுதிக் குடலிறக்கம்!

வயிற்றுப்பகுதி உறுப்புகள், குறிப்பாக குடல் இருக்கு மிடத்தை விட்டு நழுவி, பிற இடத்துக்குச் சென்று புடைத் துக் கொண்டிருப்பதை குடலிறக்கம் என்று சொல்கிறோம்.

**குடலிறக்கத்தின் வகைகள்**

குடலிறக்கத்தில் பல வகைகள் இருக்கின்றன. அவை ஏற்படுமிடத்தைப் பொறுத்து இவற்றுக்குப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

1. தொடைப் பகுதிக் குடலிறக்கம்.
2. அரைப் பகுதிக் குடலிறக்கம்.
3. தொப்புள் குழிப் பகுதிக் குடலிறக்கம்.
4. முதுகுப் பகுதிக் குடலிறக்கம்.
5. வயிற்றுப் பகுதிக் குடலிறக்கம்.

இதில், தொடைப் பகுதியில் ஏற்படும் குடலிறக்கம் பெரும்பாலும் பெண்களுக்கு ஏற்படக் கூடியதாகும்.

பெரும்பாலான "குடலிறக்கம்" நிற்கும்போது நன்றாகத் தெரியும். படுத்திருக்கின்றபோது சரிவரத் தெரிவதில்லை. இவ்வாறான குடலிறக்கத்தை கையால் உட்புறமாக தள்ளினாலும் மறைந்து விடும். சிலருக்கு குடலிறக்கம் மறையாமல் அப்படியே இருக்கும்.

சிலருக்கு இறங்கிய குடல் பகுதி மீண்டும் பழைய இடத்துக்குச் செல்ல முடியாமல் அடைத்துவிடும். இவ்வாறு அடைபட்ட குடல் பகுதி மென்மேலும் அழுத்தப்பட்டால், அந்தக் குடல் பகுதிக்கு 'இரத்த ஓட்டம்' செல்லாது. இதனால் அது செயலிழந்து அழுகி, பெரிய ஆபத்தை ஏற்படுத்திவிடும்.

**தொடைப்பகுதியில் ஏற்படும் குடலிறக்கம்**

ஆண்களைப் போலவே பெண்களுக்கு அதிகமாக ஏற்படும் ஹெர்னியாவின் பெயர் பெமோரல் ஹெர்னியா. இது மேல் தொடைப்பகுதி அல்லது கவட்டை என்று சொல்லப்படும் பகுதியில் ஏற்படுகிறது. வயிற்றில் இருந்து காலுக்கு இரத்தக் குழாய், நரம்புகள் போன்றவற்றை எடுத்துச் செல்லும் கால்வாய்ப் பகுதியில் தசைகள் பலவீனமாகும் போது இந்த வகை ஹெர்னியா ஏற்படுகிறது. இது தொடைப் பகுதியின் முன்பகுதியில், மேற்புறத்தில் உட்புறமாக 'தொடைக் குழாய்' போன்ற சவ்வுப்பகுதி இருக்கும். இதன் வழியாகத்தான் 'குடலிறங்கி' வரும்.

இது தொடையின் உட்பகுதியில் ஏதோ ஒரு கட்டியைப் போல தென்படும். இந்த வகைக் குடலிறக்கம் உண்டாகிவிட்டால், அதை உள்ளே தள்ளியபோதும் மறைவதில்லை. எனவே, இது அடைபட்டு ஆபத்தை விளைவித்துவிடும்.

இடுப்பு முன்பகுதி எலும்பான 'பியூபிக்' எலும்பின் முகடுக்குக் கீழாகவும், வெளிப்புறமாகவும் இந்த 'குடலிறக்கத்தின்' கழுத்துப்பகுதி அமைந்திருக்கும்.

யாருக்கு ஏற்படும்?

இந்த வகை குடலிறக்கம் 15 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத்தான் ஏற்படும். 20 வயது முதல் 40 வயதிற்குட்பட்டவர்களுக்கு அதிகமாக ஏற்படும். அதன் பின்னர், வயதாக, வயதாக, தசைகள் தளர்ந்து வர, இந்தக் 'குடலிறக்கமும் ' அதிகமாக ஏற்படும். இது





தொகுப்பு:
பைசல் இஸ்மாயில்

பெரும்பாலும் வலதுபுறத் தில்தான் ஏற்படும். சிலருக்கு இரண்டு புறமும் தோன்றும்.

**இதன் அறிகுறிகள்**

அறையில் தோன்றும் குடலிறக்கத்தைவிட இது குறைவான பிரச்சினைகளைத்தான் ஏற்படுத்தும். அல்லது பிரச்சினைகளை ஏற்படுத்தாமலும் இருக்கும். எனவே, இவ்வகைக் குடலிறக்கத்தைக் கண்டு பிடிக்கத் தாமதமாகும்.

தொடைப்பகுதியில் இவை துருத்திக் கொண்டு இருப்பதில்லை. இதைக் கண்டு பிடிப்பதில் தாமதம் ஏற்படுகிறது. சிலருக்கு கீழே ஏதோ இழுப்பது போன்ற உணர்வு ஏற்படலாம். குடலையும் அதைச் சுற்றி இருக்கும் சவ்வும் ஒட்டிக் கொள்வதால் வலி ஏற்படும்.

இந்த "குடலிறக்கத்தை' தொடைப் பகுதியில் தோன்றும் பிற வகை வீக்கங்களில் இருந்து கண்டுபிடிக்க வேண்டும்.

**பிற வீக்கங்கள்**

அரைப் பகுதியில் தோன்றும் குடலிறக்கம், தொடைப் பகுதிக் குழாய் வீக்கம், தொடைப் பகுதியில் வீக்கமடைந்த 'கழலை' (நிணநீர் திட்டு), கொழுப்புக்கட்டி, தொடைப் பகுதி இரத்தக் குழாய் வீக்கம், பழுப்பு சீழ் கட்டி போன்றவை இதில் முக்கியமானவையாகும்.

**பரிசோதனைகள்**

சத்திர சிகிச்சை நிபுணர் நோயாளியை நன்கு பரிசோதனை செய்து எளிதாக இந்த வகை குடலிறக்கத்தைக் கண்டுபிடித்து விடுவார். எனவே, இதில் சிரமம் இருக்காது. இது குறித்து தேவையற்ற பரிசோதனைகளும் செய்ய வேண்டிய அவசியமில்லை.

**சிகிச்சைகள்**

இந்த குடலிறக்கத்துக்கும் பிற குடலிறக்கத்தைப் போலவே அறுவை சிகிச்சை செய்ய வேண்டும்.

தாமதப்படுத்தினால் குடல் நலிந்து, அழுகிப் பெரிய ஆபத்தை ஏற்படுத்தி விடும். எனவே, எவ்வளவு விரைவாக அறுவை சிகிச்சை செய்ய முடியுமோ அவ்வளவு விரைவாக செய்திட வேண்டும்.

இதற்கு மேற்பகுதியில், கீழ்பகுதியில், அரைப் பகுதியில் செய்யும் அறுவை சிகிச்சை என மூன்று வகைகள் இருக்கின்றன.

இந்த குடலிறக்கத்தை குறைப்பதற்கும், வராமல் தடுக்கவும் அரையில் ஏற்படும் குடலிறக்கத்தைப்போல தடுப்பு பேல்ட்கள் பயன் அளிப்பதில்லை.

பாதிக்கப்பட்ட பகுதியைத் திறந்து "குடலிறக்கப் பகுதியை" கண்டறிந்து "குடல் மற்றும் பிறபகுதிகளை மீண்டும் பழையபடியே உள்ளே தள்ளிவிடுவார்கள். குடலிறக்கப் பையைச் சரிசெய்து, அதன் கழுத்துப் பகுதியில் முடிச்சு போடுவார்கள். மீண்டும் குடலிறக்கம் ஏற்படா வண்ணம் தடுக்க, அப்பகுதிகளை முறையாக தைத்து பலப்படுத்துவார்கள். வெளிப்புறமும் தையல் போட்டு மருந்து வைப்பார்கள்.

காயம் குணமடையும் வரை தினமும் மருந்து வைப்பதுடன், காயம் ஆறுவதற்கு நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளையும் தொடர்ந்து ஊசியாக செலுத்தப்படும்.

பின்னர், தையலை ஒரு வாரத்தில் எடுத்துவிடுவார்கள். அதன் பின்னர், முதல் ஒரு மாதம் அதிக கடினமான வேலைகள் செய்யக் கூடாது, சைக்கிள் மிதிக்கக் கூடாது, கடினமான, பாரமான பொருள்களைத் தூக்கக்கூடாது, மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

இருமல் வந்தால் அதற்குரிய மருந்தை குடிக்க வேண்டும். இதன் மூலமும் குடலிறக்கத்தை வராமல் தடுக்கலாம்.

**டாக்டர் முத்துச் செல்லக்குமார்**
MD (Gen.Medi.)




# நலன்புரி நன்மைகள் பிரிவு கல்முனை பிரதேச செயலகத்தில்

(பாறுக் ஷிஹான்)

அரசால் நடைமுறைப்படுத்தப்படும் அசுவெசும நலன்புரி நன்மைகளைப் பொது மக்களுக்கு இலகுவாக பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் "நலன்புரி நன்மைகள் பிரிவு" கல்முனை பிரதேச செயலக வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

அரசு அசுவெசும திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை நடைமுறைப்படுத்தப்படுத்தவுள்ள நிலையில் கல்முனை பிரதேச செயலக பிரிவிலுள்ள பொது மக்களின் நன்மை கருதியே இதற்கான தனியான பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர், நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சி.எம். பளீல், நிர்வாக கிராம உத்தியோகத்தர் உபுல் குமார, அபிவிருத்தி இணைப்பாளர் ஏ.யாசீன் பாவா, பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் (திட்டமிடல்) ஏ.எஸ்.எம்.முஜாஹித், நலன்புரி நன்மைகள் பிரிவு பொறுப்பாளர் ஏ.எல்.ஏ.நஜீபர் உட்பட சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பொலிவேரியன் கிராமத்துக்கு செல்லும் இரும்புப் பாலம் சேதம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது பொலிவேரியன் குடியேற்ற கிராமத்துக்குச் செல்லும் பிரதான இரும்புப் பாலம் பொது மக்கள் பயணிக்க முடியாத நிலையில் துருப் பிடித்து ஓட்டை விழுந்துள்ளது.

சாய்ந்தமருதிலுள்ள எம்.எஸ். காரியப்பர் வித்தியாலயம், கலாச்சார மண்டபம், பொது விளையாட்டு மைதானம், சுகாதார வைத்திய நிலையம், ஹிஜ்ரா பள்ளிவாசல், குவாசி நீதி மன்றம், பெண்கள் அரபிக் கல்லூரி, கால்நடை அபிவிருத்தி நிலையம் போன்ற முக்கியமான இடங்களுக்கு செல்வோர் இந்தப் பாலம் ஊடாகவே பயணிக்க வேண்டியுள்ளது.

இந்தப் பாலம் முற்றாக அழிவதற்கு முன் இப்பாலத்தை திருத்தித் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.



# கிழக்கு நட்புறவு ஒன்றிய வீதி என சாய்ந்தமருது வீதிக்கு பெயரிடுக!

## மகஜர் மூலம் கோரிக்கை

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

சாய்ந்தமருது 16 பிரதான வீதியிலிருந்து மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாசலுக்கும், ஐ.ஓ.சி.எரிபொருள் நிலையத்துக்கும் இடையில் கரை வாகுபற்றுக்குச் செல்லும் வீதிக்கு இதுவரை பெயரிடப்படாதுள்ளது.

எனவே கடந்த 25 வருடங்களுக்கு மேலாக சமூக சேவையில் ஈடுபட்டுவரும், அவ் வீதியில் தனது தலைமைக் அலுவலகத்தைக் கொண்டுள்ள ஈ.எப்.ஓ. அமைப்பின் பெயரை ஈ.எப்.ஓ. வீதி என இடுமாறு கல்முனை மாநகர பொறியியலாளர் ஏ.ஜே.எம்.ஜௌஸியிடம் கிழக்கு நற்புறவு ஒன்றிய முக்கியஸ்தர்கள் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.



# சாய்ந்தமருதில் கௌரவிப்பு!

**(நூருல் ஹுதா உமர் )**

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் சென்ற கே ஆதம்பாவா, எம்.நபார் மற்றும் சமுர்த்தி முகாமையாளராகப் பதவியுயர்வு பெற்ற எம்.எம்.எம்.முபாறக் ஆகியோருக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் (11) சாய்ந்தமருது சமுர்த்தி வங்கிச் சங்கக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



இந்த நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் சமுர்த்தி தலைமைப்பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சி.ஏ. நஜீம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபரும் சமுர்த்தி மாவட்ட பதில் பணிப்பாருமான வி. ஜெகதீசன், கௌரவ அதிதியாக சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக, சமுர்த்தி வங்கி சங்க முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ. மஜீத், வங்கி முகாமையாளர் ஐ.எல்.சித்தி ஹிதாயா, கருத்திட்ட முகாமையாளர் எஸ்.றிபாயா, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் 74 சதவீதமானோர் பிற்படுத்தப்பட்டோர்

## ராகுல் காந்தி தெரிவிப்பு



இந்தியாவின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் பிற்படுத்தப்பட்டோர், தலித் மற்றும் பழங்குடியினரின் பங்கு 74 சதவீதமாக உள்ளது என்று ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி பாரத் ஜோடோ நியாய் யாத்திரை மேற்கொண்டு வருகிறார். சத்தீஸ்கர் மாநிலம் கொர்பா நகரில் நேற்று யாத்திரை மேற்கொண்ட ராகுல் காந்தி அங்கு கூடியிருந்த பொதுமக்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் பிற்படுத்தப்பட்டோர், தலித் மற்றும் பழங்குடியினரின் பங்கு 74 சதவீதமாக உள்ளது. ஆனால், நாட்டின் 200 முன்னணி நிறுவனங்களின் உரிமையாளராகவோ அல்லது உயர்மட்ட நிர்வாகக் குழுவிலோ இந்த சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர்கூட இல்லை.

பெரிய மருத்துவமனைகள் மற்றும் பல்கலைக் கழகங்களின் உயர் பதவியில் பிற்படுத்தப்பட்ட, தலித், பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்கள் இடம்பெறவில்லை.

எனவே, சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தி, இடஒதுக்கீடு வழங்க வேண்டும். இந்தியாவை இந்துநாடாக மாற்ற பா.ஜ.க. முயற்சிக்கிறது. ஆனால், நாட்டு மக்களில் 74 சதவீதம் பேருக்கும் பொதுப் பிரிவைச் சேர்ந்த ஏழைகளுக்கும் எதுவுமே கிடைக்கவில்லை. அவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். நாட்டின் வளங்கள் பெரும்பாலும் குறிப்பிட்ட சில தொழிலதிபர்களுக்காக திருப்பி விடப்படுகிறது. அயோத்தியில் ராமர் கோயில் திறப்பு விழா நடைபெற்றது. இதில் ஏழைகள், தொழிலாளர்கள், சிறு வியாபாரிகளை பார்க்க முடியவில்லை.

ஆனால் அம்பானி, அமிதாப் பச்சன், அதானி உள்ளிட்ட முக்கிய பிரபலங்களை பார்க்க முடிந்தது. அதானி, அம்பானி உள்ளிட்ட தொழிலதிபர்கள் நாட்டு மக்களின் நலனை விலையாக கொடுத்து சீன பொருள்களை விற்பனை செய்து லாபம் ஈட்டுகின்றனர். இது பொருளாதார அநீதி ஆகும்.

ராகுல் காந்தியின் பேச்சு ஏன் ஊடகங்களில் வெளியாவதில்லை என நீங்கள் கேட்கலாம். மோடி, அம்பானி, அதானி மற்றும் ராம்தேவ் உள்ளிட்டோரை ஊடகங்களில் பார்க்க முடியும். ஆனால், நாட்டில் உள்ள பிரச்சினைகளை பேசுவதால் ராகுலை பார்க்க முடியாது. நாட்டு மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை.

அத்துடன், பணவீக்கத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். மக்களின் பணம் கொள்ளை அடிக்கப்படுகிறது. ஏழைகள் பசியால் உயிரிழக்கின்றனர். நாட்டு மக்கள் தவறாக வழிநடத்தப்படுகின்றனர். எனவே மக்கள் அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் இளைஞர்கள் முதல் பெரியவர்கள் வரை செல்போனில் மூழ்கிக் கிடக்கின்றனர். இதனால் உங்கள் கவனம் சிதறடிக்கப்படுகிறது. செல்போன் மோகத்திலிருந்து விடுபட்டு உண்மையான பிரச்சினைகளில் கவனம் செலுத்த வேண்டும்." – என்றார்.

# ஆளுநர் உரையின்போது நடைபெற்ற சம்பவம் தமிழக அரசின் முறையற்ற செயலுக்கு உதாரணம்

## ஜி.கே.வாசன் குற்றச்சாட்டு



தமிழக சட்டப்பேரவையில் நேற்று ஆளுநர் உரையின் போது நடைபெற்ற சம்பவத்துக்கு காரணம் தமிழக அரசின் முறையற்ற செயல்பாடு தான் என்று தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் எம்.பி குற்றம்சாட்டியுள்ளார்.

தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் எம்.பி இது குறித்து வெளியிட்டிருக்கும் அறிக்கையில்,

"தமிழக சட்டப்பேரவையில் நேற்று ஆளுநர் உரையின் போது நடைபெற்ற சம்பவத்திற்கு காரணம் தமிழக அரசின் முறையற்ற செயல்பாடு தான். நேற்றைய தினம் தமிழக சட்டப்பேரவையில் ஆளுநரின் உரையின் போது நடைபெற்ற சம்பவம், தமிழக அரசின் முறையற்ற செயல்பாட்டுக்கு உதாரணம். தமிழக மக்களுக்கான, தமிழ்நாட்டுக்கான தமிழக அரசின் ஆளுநர் உரையில் சரியான செய்திகள் இடம் பெற வேண்டும். ஆனால் உண்மைக்குப் புறம்பான செய்திகள் இடம் பெற்றுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதற்கு காரணம் தமிழக அரசு. குறிப்பாக தமிழக ஆளுநரை தமிழக அரசு பல சமயங்களில் அவரது எதிர்ப்புக்கு ஏற்ப நடவடிக்கைகளில் ஈடுபட்டது தான்.

மேலும் தமிழக ஆளுநரின் பதவிக்கு உரிய மரியாதை, முறையான நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு பாதகம் இருக்கக்கூடாது. நேற்றைய சட்டப்பேரவையில் ஆளுநர் உரையாற்றும் போது அதற்கு எவ்விதத்திலும் இடையூறு இருக்கக்கூடாது என்பதில் தமிழக அரசு கவனம் செலுத்தவில்லை. தமிழக அரசுக்கும், ஆளுநருக்குமான விரும்பத்தகாத நிகழ்வுகள் இனியும் தொடரக் கூடாது என்பதே தமிழக மக்களின் எதிர்பார்ப்பு.

தமிழக அரசு தமிழர்களுக்கான, தமிழ்நாட்டுக்கான வளர்ச்சிக்கு திட்டங்கள், நடவடிக்கைகள், செயல்பாடுகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தி, ஆளுநரின் செயல்பாடுகளுக்கு தேவையற்ற விமர்சனங்களை தவிர்த்து முறையாக செயல்பட வேண்டும் என்பதை தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்" – என்று குறிப்பிட்டுள்ளார்.

# தமிழக சட்டப்பேரவைக் கூட்டத் தொடரில் விஜயகாந்த் மறைவுக்கு இரங்கல் தீர்மானம்

## உறுப்பினர்கள் மௌன அஞ்சலி


தமிழக சட்டப்பேரவைக் கூட்டத் தொடரின் இரண்டாம் நாளான இன்று தே.மு.தி.க. தலைவரும், நடிகரும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான விஜயகாந்த் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சபாநாயகர் அப்பாவு இரங்கல் தீர்மானத்தை வாசித்தார். தொடர்ந்து இரண்டு மணித் துளிகள் உறுப்பினர்கள் மௌன அஞ்சலி செலுத்தினர்.

நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டிருந்த தே.மு.தி.க. நிறுவனத் தலைவர் விஜயகாந்த் சிகிச்சை பலனின்றி கடந்த டிசம்பர் 28 ஆம் திகதி காலமானார். அவரது உடல் அரசு முழு மரியாதையுடன் சென்னை கோயம்பேட்டில் உள்ள தே.மு.தி.க. கட்சி அலுவலகத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த நிலையில், சட்டப்பேரவையில் அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக, சட்டப்பேரவையின் ஆண்டு முதல்கூட்டம் ஆளுநர் ஆர்.என்.ரவி உரையுடன் நேற்று தொடங்கியது. இதையடுத்து. அலுவல் ஆய்வுக்குழு கூட்டம் பேரவைத்தலைவர் அப்பாவு தலைமையில் நடைபெற்றது.



இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த சபாநாயகர் அப்பாவு, "பெப்ரவரி 13 ஆம் திகதி பேரவையில், முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்த இரங்கல் குறிப்புகள், இரங்கல் தீர்மானங்கள் வாசிக்கப்படும். அதைத்தொடர்ந்து, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் தொடங்கும். தொடர்ந்து, 14 ஆம் திகதியும் விவாதம் தொடர்ச்சியாக நடைபெறும். 15 ஆம் திகதி ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான பதிலுரையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அளிப்பார். அத்துடன், பேரவை கூட்டத் தொடர் முடிந்துவிடும்" எனத் தெரிவித்திருந்தார்.

அதன்படி இன்று ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெற்றது.

# அதிகாரப்பூர்வ கூட்டணிப் பேச்சு இன்னும் ஆரம்பிக்கவே இல்லை

## பிரேமலதா தெரிவிப்பு



அதிகாரப்பூர்வ கூட்டணி பேச்சுவார்த்தை இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்று தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

தே.மு.திகவின் 24 ஆம் ஆண்டு கொடி நாள் விழா தமிழகம் முழுவதும் நேற்று கொண்டாடப்பட்டது. கட்சியின் தலைமை அலுவலகத்தில், பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கொடியேற்றி வைத்து செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"நாடாளுமன்ற தேர்தலில் நுழைய 4 வழிகள் மட்டுமே தற்போது உள்ளன. அதன்படி அ.தி.மு.க, தி.மு.க, பா.ஜ.க கட்சிகளுடன் கூட்டணி அமைப்பது. அல்லது தனித்து போட்டியிடுவது. அதன்படி கடந்த வாரம் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் தனித்து போட்டியிடலாம் என பெரும்பாலான மாவட்ட செயலாளர்கள் தெரிவித்திருந்தனர்.

மேலும் 2014 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்டது போல 14 ஆசனங்கள் கொடுத்து மரியாதையுடன் வழி நடத்துபவர்களுடன் கூட்டணி அமைக்கலாம் என்றும் கருத்து தெரிவித்தனர்.

இது கட்சி தலைமையின் கருத்தோ, என்னுடைய கருத்தோ கிடையாது. மாவட்ட செயலாளர்களின் கருத்து மட்டுமே. அடுத்தக்கட்ட ஆலோசனை கூட்டத்தில் இறுதி முடிவு செய்யப்பட்டு, கூட்டணி தொடர்பாக அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடப்படும். இது தேர்தல் அரசியல்.

இதில் மறைமுகமாக பேச வேண்டிய அவசியம் இல்லை. தமிழகத்தில் கூட்டணிக்கு தி.மு.க, அ.தி.மு.க, பா.ஜ.க. ஆகிய கட்சிகள் தலைமை ஏற்று இருக்கின்றனர். இக்கட்சிகள் தான் கூட்டணி பேச்சை முதலில் தொடங்க வேண்டும். அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வரும் போது, தே.மு.தி.கவின் நிலைப்பாடு அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும்.

தே.மு.தி.கவுக்கும் ராஜ்யசபா ஆசனம் கேட்க உரிமை இருக்கிறது. ஆனால் இதுவரை தேர்தலுக்கான அதிகாரப் பூர்வமான பேச்சுவார்த்தை இன்னும் தொடங்கவில்லை." – என்றார்.




# நியூயோர்க் ரயில் நிலையத்தில் துப்பாக்கிச் சூடு!

நியூயோர்க்கில் ரயில் நிலையத்தில் மர்மநபர் ஒருவர் திடீரென நடத்திய துப்பாக்கிச்சூட்டில் பயணி ஒருவர் உயிரிழந்துள்ளார். 5 பேர் காயம டைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங் கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ப்ரான்க்ஸ் பகுதியில் உள்ள மவுண்ட் ஈடன் ஏவ் ரயில் நிலையத்தில் நேற்று மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 4 ஆண்கள் மற்றும் 2 பெண்கள் படுகாயமடைந்தனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டில் 34 வயதான நபர் ஒருவரே சிகிச்சை பல னின்றி பரிதாபமாக உயிரிழந்துள் ளார்.

துப்பாக்கிச்சூடு நடத்திய நபர் பய ணித்துக் கொண்டிருந்த ரயிலில் அவருக்கும் அங்கிருந்த சிலருக்கும் இடையே தகராறு ஏற்பட்டதாக கூறப் படுகின்றது.

இந்த நிலையில், ரயில் நிலையத்தில் இறங்கியதும் அந்த நபர் தன் கையி லிருந்த துப்பாக்கியால் அங்கி ருந்தவர்களை நோக்கி சுட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பாக நியூ யோர்க் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து, தப்பியோடிய நபரை தீவிரமாக தேடி வருகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.






# மின்னல் தாக்கி உதைபந்தாட்ட வீரர் பலி!

இந்தோனேஷியாவில் உதைபந்தாட்ட வீரர் ஒருவர் மின்னல் தாக்கியதில் பரிதாபகரமாக உயிரிழந் துள்ளார்.

உதைபந்து விளையாடிக் கொண்டி ருந்த போது, மைதானத்தில் இருந்த செப்டெய்ன் ரஹர்ஜா என்ற வீரரை மின்னல் தாக்கியுள்ளது.

இது தொடர்பான காணொலி தற் போது சமூக வலைதளங்களில் வைர லாகி வருகிறது.

இந்தோனேஷியாவின் சுபாங்கைச் சேர்ந்த 34 வயதான செப்டெய்ன் ரஹர்ஜா, மேற்கு ஜாவாவில் உள்ள பாண்டுங்கில் உள்ள சிலிவாங்கி மைதா னத்தில், எஃப்சி பாண்டுங் மற்றும் எஃப்பிஜ சுபாங் இடையேயான உதை பந்தாட்ட போட்டியில் பங்கேற்றுள்ளார்.

இதன் போது, மைதானத்தில் தனி யாக நின்று பந்தின் வருகைக்காக காத்திருந்த வீரரை மின்னல் தாக்கி யுள்ளது.

இதையடுத்து, அந்த இடத்திலேயே விழுந்த அவரை சக வீரர்கள் வைத் தியசாலையில் அனுமதித்துள்ள னர்.

எனினும், அவரை சோதனை செய்த வைத்தியர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என தெரிவித் துள்ளனர்.

இந்த சம்பவம் மக்கள் மத்தியில் பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத் தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ரஃபாயில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 2 இஸ்ரேலிய பணயக் கைதிகள் மீட்பு



காசாவின் தென் பகுதியினை இஸ்ரேலிய வானூர்திகள் தாக்கியதை அடுத்து ரஃபா நகரத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு இஸ்ரேலிய பணயக் கைதிகள் மீட்கப்பட்டனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலினால் மேற்கொள்ளப்பட்ட வான் தாக்குதலில் குறைந்தது 67 பேர் உயிரிழந்தனர் என ஹமாசின் கட்டுப் பாட்டின் கீழ் உள்ள சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொல்லப்பட்ட அனைவரும் பொது மக்கள் என அடையாளம் காணப்பட்டுள் ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், விடுவிக்கப்பட்ட இஸ்ரேலிய பணயக் கைதிகளுக்கு தமது வாழ்த்துக்களை வெளியிட்டுள்ள இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத் தன்யாகு, ஏனையவர்களையும் விடு விப்பதற்கான நடவடிக்கைகள் தொடரும் என தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு செய்தி ஸ்தாபனங்க ளின் பிரதிநிதிகள் தாக்குதல் நடை பெறும் ரஃபா நகரத்திற்கு செல்வதற்கு கடுமையான தடை விதிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த நிலையில் 15 லட்சம் பாலஸ்தீனியர்கள் தற்காலிக கூடாரங் களில் அகதிகளாக உள்ளனர்.

இந்தநிலையில், அந்த பிராந்தியத் தில் இராணுவ நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள வேண்டாம் என பல நாடு கள் வேண்டுகோள் விடுத்த போதிலும், இஸ்ரேல் அதற்கு இணக்கம் தெரிவிக்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் ஜனாதிபதியான என்னை விசாரணைக்கு உட்படுத்த முடியாது

## டொனால்ட் ட்ரம்ப் தெரிவிப்பு



தேர்தலை சீர்குலைக்க முயன்ற குற்றச்சாட்டின் பேரில் தமக்கு எதிரான விசாரணையை இடைநிறுத்துமாறு அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க உயர் நீதிமன்றத்திடம் கோரியுள்ளார்.

ஜனாதிபதியாக செயற்பட்ட தம்மை விசாரணைக்கு உட்படுத்த முடியாது எனவும் அவர் தேர்தல் குறுக்கீடு தொடர் பான வழக்கில் கூறியுள்ளார்.

எனினும், மூன்று கீழ் நீதிமன்ற நீதிபதிகள் உடன்படாத நிலையில் ஏனைய குடிமக்களைப் போலவே அவர் மீதும் வழக்குத் தொடரலாம் என தீர்ப்பளித்தனர்.

எவ்வாறாயினும், தேர்தல் பிரசாரத் தின் போது டொனால்ட் ட்ரம்ப் மீது விசாரணை நடத்தக் கூடாதென அவரது சட்டத்தரணிகள் கோரியுள்ளனர்.

தேர்தல் காலத்தில் உச்சத்தில் உள்ள முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது ஒரு மாத கால குற்றவியல் விசாரணையை நடத்துவது, ஜனாதிபதி ஜோ பைடனுக்கு எதிராக பிரசாரம் செய்யும் டொனால்ட் ட்ரம்பின் திறனை தீவிரமாக சீர்குலைக்கும் எனவும் சட்டத்தரணிகள் வலியுறுத்தியுள்ளனர்.

ஜோர்ஜியாவில் கடந்த 2020 ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகளை மாற்றிய மைக்க முயன்றார் என கூறப்படும் குற்றச்சாட்டுகளை டொனால்ட் ட்ரம்ப் எதிர்கொண்டுள்ளார்.

எனினும், பல தடவைகளில் அவர் மேற்படி குற்றச்சாட்டுக்களை மறுத்துள் ளார் என்பது குறிப்பிடத்தக்கது.